In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.3 |
| Name: Alex | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அசா1 என் அண்ணன் மனைவி. அசா2 என் அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் முத்துலாபுரத்தைச் சேர்ந்தவர். 17.05.2020 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் எனது அண்ணன் அழகர்சாமி வத்தலக்குண்டு சென்றுவிட்டு பைக்கில் முத்துலாபுரம் கோவில் அருகே வந்து கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி ஏன் வேகமாக வருகிறாய் என்று கூறி அசிங்கமாக என் அண்ணனை சத்தம் போட்டுள்ளார். என் அண்ணன் வீட்டிற்கு மேற்படி விவரத்தை எங்களிடம் சொன்னார். ஏன் இப்படி பேசுகிறான் என கேட்பதற்காக சுமார் 2.45 மணியளவில் நான், என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி, அழகர்சாமி, என் அப்பா ராமர், அசா1 கற்பகம் எல்லோரும் எதிரி வீட்டிற்கு போனோம். நாங்கள் போன உடன் எதிரி வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து ஆபாசமான வார்த்தைகளால் பேசினான். வாய்த்தகராறு நடந்து கொண்டு இருந்தபோது எதிரி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் இடது பக்க மார்பிலும் அதற்கு கீழும் குத்தி விட்டான். நாங்கள் எதிர்பார்க்காமல் இருந்த நேரத்தில் எதிரி குத்திவிட்டான். இரத்தம் அதிகமாக வெளியேறியது. பதட்டத்தில் என்ன செய்வது என தெரியவில்லை. எனது நண்பர் வினோத்

பக்கத்தில் இருந்தவனை அழைத்துக்கொண்டு காயம்பட்ட என் அண்ணனை பைக்கில் ஏற்றிக்கொண்டு வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதனை செய்து என் அண்ணன் இறந்து விட்டதாகச் சொன்னார். அதன் பின்னர் நாங்கள் மருத்துவமனையிலேயே இருந்தோம். என் அப்பாவும் அண்ணியும் மருத்துவமனையில் இருந்து பட்டிவீரன்பட்டி காவல் நிலையம் சென்று புகார் செய்தார்கள். சாபொ1 என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியால்தான் எதிரி என் அண்ணனை குத்தினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:54:24 +0530

Principal District Judge,
Dindigul.